**சுதந்திரத்திற்கு பின்னரான அரசியலமைப்புகளும் சிறுபான்மையினரின் நிலைமைகளும்**

**(சட்டத்தரணி கனக நமநாதன் LL.B) (பாகம் - 22)**

**அரசியலமைப்பின் 14வது திருத்தச் சட்டம்**

இச்சட்டம் 24.05.1988ந் திகதி நிறைவேற்றப்பட்டது. இந்த திருத்தச் சட்டம் பல திருத்தங்களை அரசியலமைப்பில் செய்துள்ளது. அரசியலமைப்பின் உறுப்புரை 35 திருத்தப்படுவதன் மூலம் சனாதிபதி பதவிக்குள்ள விடுபாட்டுரிமையில் (Immunity) சில நீதிமன்ற வழக்குகள் சம்பந்தமாக விதிவிலக்குகளை உருவாக்கியுள்ளது. அத்துடன் உறுப்புரை 62 திருத்தப்படுவதன் மூலம் பாராளுமன்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை 196 ஆக இருந்ததை 225 ஆக அதிகரித்து சட்டமாக்கப்பட்டுள்ளது.
மேலும் உறுப்புரை 80 திருத்தப்படுவதன் காரணமாக மக்கள் தீர்ப்பின் மூலம் ஒரு சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் அதற்கு சாதகமாக கொடுபட்ட மக்கள் தீர்ப்பின் வலிதான்தன்மையானது அதற்கெதிராக எந்த மனுவும் சட்டத்தினால் வரையறுக்கப்பட்ட கால எல்லைக்குள் நீதிமன்றில் தாக்கல் செய்திராதிருந்தால் அல்லது எதிரான மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்து அம் மக்கள் தீர்ப்பு வலிதானது என்ற தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்தால் மட்டுமே சனாதிபதி அதற்கான சான்றுரையை வழங்க முடியும் என்கின்றது.
மேலும் உறுப்புரை 96க்கு அடுத்து 96அ என்ற புதிய உறுப்புரையை உட்புகுத்தி திருத்துவதன் மூலம் சில தேர்தல் மாவட்டங்களை வலையங்களாக மாற்றுவதற்காக மூன்று அங்கத்தவர்களை கொண்ட எல்லை நிர்ணய ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. பத்துக்கும் இருபதுக்கும் இடைப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்தல் மாவட்டம் இரு வலயங்களாகவும் இருபதுக்கு மேற்பட்டவை மூன்று வலயங்களாகவும் பிரிப்பதற்கும் அதன் பெயர்களையும் எல்லைகளையும் தீர்மானிக்கவும் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும்.
மேலும் இத்திருத்தச் சட்டத்தினால் உறுப்புரை 98 இன் 8ம் பந்தி நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதுப்பந்தி சேர்க்கப்படுவதன் மூலம் தேர்தல் ஆணையாளர் வாக்காளர் பட்டியலைத் தயாரித்து அத்தாட்சிப்படுத்தியதும் 97ம் உறுப்புரைக்கு அமைவாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் அதேபோன்று வலயங்களுக்கும் எத்தனை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்ற விபரத்தை வர்த்தமானியில் வெளியிட வேண்டும் என்கின்றது.

**விகிதாசார தேர்தல் முறைமையில் திருத்தம்**

மேலும் ஒரு முக்கிய திருத்தமாக அரசியலமைப்பின் உறுப்புரை 99 நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக புதிய உறுப்புரை சேர்க்கப்பட்டு விகிதாசார தேர்தல் முறைமையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தில் அல்லது வலயங்களில் போட்டியிடும் அபேட்சகர்களின் எண்ணிக்கையானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அம்மாவட்டங்களில் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையிலும் பார்க்க மூவர் கூடுதலாக இருத்தல் வேண்டும் என்றுள்ளது.
மேலும் ஒவ்வொருவருக்கும் ஒரு வாக்கை செலுத்தும் உரிமையே உண்டு. இருந்தாலும் மூன்று வாக்குகளுக்கு மேற்படாமல் தனது விருப்புரிமை வாக்குகளை அதே கட்சி அல்லது அதே சுயேட்சை குழுவுக்கு ஒருவர் அளிக்கலாம். அந்தந்த தேர்தல் மாவட்டம் அல்லது வலயங்களில் கூடுதலான விருப்புரிமை வாக்குகளை பெறுபவர் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினராக அறிவிக்கப்படுவார். அடுத்து கூடுதல் வாக்குகளை (எக் கட்சியினரானாலும்) பெறுபவர் அத்தேர்தல் மாவட்டத்தின் இரண்டாவது உறுப்பினராவார். அது போன்று எத்தனை உறுப்பினர்களை அம்மாவட்டத்தில் தெரிவு செய்ய தேர்தல் ஆணையாளர் அறிவித்திருந்தாரோ அடுத்தடுத்த கூடிய வாக்குகளை பெற்றவர்கள் உறுப்பினராக அறிவிக்கப்படுவார்கள். அந்த தேர்தல் மாவட்டத்தில் அல்லது வலயத்தில் இடப்பட்ட மொத்த வாக்குகளில்

இருபதில் ஒன்றுக்கு கூடுதலாக எதாவது ஒரு சிறுபான்மைக் கட்சி தனது உச்ச வாக்குகளாக பெற்றிருந்தால் அக்கட்சி ஒரு உறுப்பினரை தெரிவு செய்ததாக அறிவிக்கப்படுவார். தேர்தலில் பங்குபற்றும் கட்சிகள் குழுக்கள் நியமனத் தாக்கல் திகதிக்கு முன்னராக பெயர்களடங்கிய ஒரு தேசியப்பட்டியலை கையளிக்கவேண்டும். தேர்தல் ஆணையாளர் அதை வர்த்தமானியிலும் பத்திரிகைகளில் மும்மொழியிலும் பிரசுரிக்க வேண்டும். ஒவ்வொரு கட்சியும் குழுவும் தேர்தலில் பெறுகின்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அது எத்தனை தேசிய பட்டியல் அங்கத்துவத்தை பெறத்தகுதி எனத் தீர்மானிக்கப்படும். அவ்வாறு தெரிவு செய்யப்படும் 29 தேசியப் பட்டியல் அங்கத்தவர்களையும் உள்ளடக்கியே 225 உறுப்பினர்களை பாராளுமன்றம் கொண்டதாக இருக்கும்.

## அரசியலமைப்பின் 15வது திருத்தச்சட்டம்

இத்திருத்தச் சட்டம் 17-12-1988 அன்று நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திருத்தச் சட்டம் இரண்டு முக்கியமான விடயங்களில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. ஏற்கனவே 14வது திருத்தச் சட்டத்தில் தேர்தல் மாவட்டங்களை தேர்தல் வலயங்களாக மாற்றுவதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழு அமைக்கப்பட்டிருந்தது. இத்திருத்தம் உறுப்புரை 96க்கு அடுத்து 96(அ) என உட்சேர்க்கப்பட்ட திருத்தம் ஆகும். ஆனால் சில காரணங்களால் அவ்வாறு செய்யப்பட்ட திருத்தம் இத்திருத்தச் சட்டத்தின் மூலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அது இத்திருத்தச் சட்டத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. ‘‘இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பில் 96(அ) எனும் உறுப்புரை நீக்கப்படுகிறது.’’

மேலும் இத்திருத்தச் சட்டத்தில் அரசியலமைப்பின் 98ம் உறுப்புரையின் 8ம் பந்தியை நீக்கி அதற்குப்பதிலாக பின்வரும் பந்தி சேர்க்கப்பட்டுள்ளது. அதன்படி தேர்தல் மாவட்டம் ஒவ்வொன்றும் எத்தனை உறுப்பினர்களை தெரிந்து அனுப்புவதற்கு உரித்துக் கொண்டுள்ளது என்பதை தேர்தல்கள் ஆணையாளர் அத்தாட்சிப்படுத்த வேண்டும். தேர்தல் வாக்காளர் இடாப்பு தயாரிக்கப்பட்டதும் அது இயன்றளவு விரைவாக வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும். அத்துடன் இத்திருத்தச்சட்டத்தில் அரசியலமைப்பின் 99ம் உறுப்புரையும் திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இத்திருத்தத்தின்படி ‘‘மொத்த வாக்குகளின் 1/8 ற்கு குறைவான’’ என்ற சொற்களுக்குப் பதிலாக ‘‘மொத்த வாக்குகளின் 1/20 ற்கு குறைவான’’ எனக் கூறப்பட்டுள்ளது.

ஒரு தேர்தல் தொகுதியில் தேர்தல் முடிவின் போது வாக்களிக்கப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில் 1/8 க்கு குறைவாக பெறும் கட்சிக்கு பிரதிநிதித்துவம் இல்லாமல் இருந்த சட்டத்தை மாற்றியமைத்து மொத்த வாக்குகளின் எண்ணிக்கையில் 1/20 க்கு குறைவாக பெறும் கட்சிக்கு பிரதிநிதித்தவம் வழங்கப்படாது என மாற்றியமைக்கப்பட்டது. இது சிறுபான்மைக் கட்சிகளுக்கு பாராளுமன்றில் பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

## அரசியலமைப்பின் 16வது திருத்தச்சட்டம்

இத்திருத்தச் சட்டமும் 17-12-1988 அன்றே நடைமுறைக்கு வந்துள்ளது. இத்திருத்தச் சட்டத்தின் மூலம் சிங்கள மொழியுடன் தமிழ் மொழியையும் நிர்வாக மொழிகளாகவும் அத்துடன் சட்டவாக்க மொழிகளாகவும் ஏற்கப்பட்டுள்ளது.

இத்திருத்தச் சட்டத்தின்படி அரசியலமைப்பினது 20வது உறுப்புரை திருத்தப்பட்டுள்ளது. அதன்படி பாராளுமன்றத்திலோ அல்லது மாகாணசபையிலோ அல்லது எந்த உள்ளூராட்சி சபைகளிலோ அவற்றின் உறுப்பினர்கள் தேசிய மொழியில் தமது கடமைகளை நிறைவேற்றலாம் எனக் கூறுகிறது.

இத்திருத்தச் சட்டத்தின் படி அரசியலமைப்பினது 22ம் 23ம் உறுப்புரைகள் நீக்கப்பட்டு அவற்றிற்கு பதிலாக புதிய உறுப்புரைகள் இடப்படுகின்றன. உறுப்புரை 22(1)ன் படி சிங்களமும் தமிழும் இலங்கை முழுவதிலும் நிருவாக மொழிகளாக இருத்தல் வேண்டும் என்றும் அத்துடன் வடகிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த இலங்கையில் உள்ள எல்லா மாகாணங்களிலும் சிங்களம் நிர்வாக மொழியாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் பொதுப்பதிவேடுகளை பேணி வருவதற்காகவும் பகிரங்க நிறுவனங்களினால் அலுவல்கள் யாவும் கொண்டு நடாத்துவதற்காகவும் சிங்களமொழி பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது.
அதே போன்று வடகிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழி அவ்வாறு நிருவாக மொழியாக பயன்படுத்த வேண்டும் என்பதுடன் பொதுப்பதிவேடுகளை பேணி வருவதற்காகவும் பகிரங்க நிறுவனங்களினால் அலுவல்கள் யாவும் கொண்டு நடாத்துவதற்காகவும் தமிழ் மொழியே பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் கூறுகின்றது.

(தொடரும்)